
சுடர் 12
கதிர் 4
தனிச்சுற்றுக்கு மட்டும்

# மிட்ஸ் ஐக்கிய சுடர்

மும்மாத இதழ்
அக்டோபர் - டிசம்பர் 2021



ஆதரவாளர்கள்

**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. ஜாண்குமார் K.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்

**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.

ஆசிரியர் குழு

**திரு. ஷாஜன் ஜோசப்**, M.S.W
**திருமதி. S. வினிதா**, M.S.W
**திருமதி. A. ஆரோக்கிய கில்டா**, M.S.W

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

**திருமதி. P. ஜெசிந்தா**, M.S.W

வெளியீடு

**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்

**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

**************************

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

**************************

# உள்ளே ...

1. இயக்குநரிடமிருந்து ........ 3
2. கொடுப்பதில் இன்பம் காண்போம் ........ 4
3. மிட்ஸ் வெள்ளி விழா - திட்ட வெளியீடு . 5
4. புதிய பணிமண்டலம் உதயம் ........ 5
5. வறுமையின் வாக்குமூலம் ........ 6
6. கொடிது கொடிது வறுமை கொடிது ........ 7
7. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிபடுத்திட .... 9
8. கெடுவதற்கு இவ்வளவு விஷயங்களா? ...... 10
9. வறுமையின் மறுபக்கம் ........ 11
10. போராடினாலும் மறுக்கப்படுகிறது ........ 12
11. பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ ... 15
12. மிட்ஸ் ஐக்கியங்களின் வருடாந்திர கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் விழா ........ 17
13. ஆட்டோ அரசிகள் முடியாதென எதுவுமில்லை 18
14. குறுக்கெழுத்துப் போட்டி ........ 20
14. கோல்பிங் தின கொண்டாட்டம் ........ 21
15. தளிர்கள் உலக கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டம் ........ 22
16. குழந்தைகள் கவனத்திற்கு ........ 23
17. புற்றுநோயில்லா உலகம் படைத்திட ........ 24
18. ஒரு குழந்தையின் குமுறல்கள் ........ 25
19. சாதனை பெண்கள் ........ 26
20. தொழில் முனைவோராகிட ........ 27



# இயக்குநரிடமிருந்து



அன்பான மிட்ஸ் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஐக்கிய சுடர் இதழ் வழியாக கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பு என்ற தறியில் நெய்யப்பட்டவைகள் தான் மதங்கள். அன்பு செய்தவர்களுக்கு மட்டுமே வரலாறு தனது பக்கங்களை நிறைவோடு வழங்கியிருக்கிறது. அன்புக்காய் கொடுத்த உயிர்கள் தான் வரலாற்றை தாங்கி பிடித்துக் கொண்டுள்ளன. பயணப்பாதையில் சுகமான பயணங்களுக்கு இரண்டு பக்க சக்கரங்களும் சமமாக செல்ல வேண்டும். இல்லையென்றால் பயணம் தடுமாறி வீழ்த்தி விடும். உங்கள் பயண பாதைகளில், வேக தடைகளில் நீங்கள் தடுக்கி விழுந்தாலும் அன்பு உங்களை தாங்கிக் கொள்ளும்.

அஸ்ஸாமில் ஒரு முறை பயங்கர புயல். மழை வெள்ளத்தால் கரைபுரண்டோடியது கங்கை நதி. அஸ்திவாரங்களோடு வீடுகளும், வேர்களோடு மரங்களும் அந்த வெள்ளத்தின் திசையில் போகின்றன. காற்றின் கரங்கள் கிளைகளை கசக்கி பிழிந்து கொண்டிருந்தன. தப்பி பிழைத்த குடும்பம் ஒன்று ஒரு மரத்தில் ஏறி அமர்ந்து, கிளைகளை இறுக்கி பிடித்து உயிரை பத்திரப்படுத்தினர்.

அப்பா, அம்மா, இரு பிள்ளைகள். காற்றில் தலைவிரிகோலமாய் ஆடிய கிளைகள், முறிந்து விழும் அபாயத்தில். கணவன் மனைவியிடம் கூறினான். "நம் அனைவரையும் தாங்கும் சக்தி இந்த கிளைக்கு இல்லை, இன்னும் சற்று நேரத்தில் இது ஒடிந்து விடும். கிளையின் பாரத்தை குறைத்தால் மட்டுமே நாம் நம் குழந்தைகளை காப்பாற்ற முடியும். எனவே நான் வெள்ளத்தில் குதித்து இறந்து விடுகிறேன். நீ பிள்ளைகளை காப்பாற்று" என்று கூறி விட்டு மனைவியின் பதிலை எதிர்பார்க்காமல் தண்ணீரில் குதித்தான். மறுநாள் பத்திரிகைகளில் அவன் பேட்டி செய்தி ஆனான். எதார்த்த அன்பை கண்டு நாடே வியந்தது.

இப்படி ஒவ்வொரு நாளும் பத்திரிகைகள் சுமந்து வரும் நிஜமான சம்பவங்கள் ஏராளம். எல்லா நெறிகளிலும் உயர்ந்த நெறி அன்பு தான். பரபரப்பான இந்த யுகத்தில் பலரது அன்பு தவணை முறையில் தான் கிடைக்கிறது. தாயன்புக்கு கூட இன்று இந்த நிலை தான். அன்பின் உச்சங்களான அம்மாக்களுக்கு கூட பிள்ளைகளை தாலாட்டவோ, சோறூட்டவோ நேரமில்லை. தொலைக்காட்சி சீரியல்கள் அவர்களுக்கு அவகாசம் கொடுப்பதில்லை.

அன்பின் அனுபவ சுகங்களை அள்ளி வைத்துக் கொள்ள நமது இதய கூடுகள் இன்னும் விரிவாக்கப்பட வேண்டும். கடவுள் ஆள்பார்த்து செயல்படுவதில்லை. அவர் தமது ஒரே மகனையே நமக்காக கையளிக்கும் அளவிற்கு நம் மீது அவர் அன்பு கூர்ந்தார்.

கடவுளின் விண்மீனை கண்டு கீழ்த்திசையிலிருந்து புறப்பட்ட ஞானிகளைப் போல கடவுளை நம் அருகில் கொண்டு வந்து அவர் காட்டிய அன்பு வழியில் வாழ்ந்து கடவுளின் வழிகளுக்கு ஏற்ப நம்மை நாமே வடிவமைத்துக் கொள்வோம். உங்கள் வாழ்வு வளம் பெற்று, மலர்ந்திட கிறிஸ்துவின் வருகை வழிகாட்ட வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்

**அருட்தந்தை ஜாண்குமார் K.**

இயக்குநர், மிட்ஸ்



# கொடுப்பதில் இன்பம் காண்போம்...

கொடுப்பதில் இன்பம் காண தன்னையே தரணிக்கு கொடுக்க வந்த இறைமகன் இயேசுவின் பிறப்பு திருவிழா வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் கொடையின் மேன்மையை உணர்ந்திட அழைப்பதே கிறிஸ்து பிறப்பு.

கடவுள் நம்மை போல் மனுவுருவாகிறார் என்பதே கிறிஸ்து பிறப்பின் மிகப்பெரிய தத்துவமாக அமைகிறது. நம்மைப் போல என்றால் நமது இன்பம், துன்பம் இரண்டிலும் நம்மோடு பயணிப்பவராக இறைவன் இருக்கிறார்.

இன்று பிறருடன் பயணித்தல் என்பது வேண்டா வெறுப்பாக மாறி வரும் சூழல். நுகர்வு கலாச்சாரத்தில் உச்சத்தில் தன்னைப் பற்றி மட்டுமே சுயநலத்தோடு சிந்தித்து சீரழிந்து வாழும் ஒரு தலைமுறையின் எச்சங்களாக மட்டுமே நாம் வாழ்ந்து வருகிறோம்.

இன்று நாம் காணும் சுற்றுப்புற சூழலியல் மாற்றங்கள், புதுப்புது சட்டங்கள் இவையனைத்தும் தன்னைப்பற்றி பெருமிதம் கொள்கின்ற மனிதனின் மட்டமான மக்கிய மனதையே காட்டுகிறது. இந்த சூழலில் கடவுள் நம்முள் ஒருவராக, உடன் பயணிப்பவராக தன்னை நம்மில் பிறக்கச் செய்யும் போது இவரது மக்களாக இருக்கும் நாம் நமது சமூகத்தில் நம்முடன் வாழும் சகோதர சகோதரிகளோடு உடன் பயணிக்கவும், நமக்கு கிடைக்கப் பெற்றிருக்கிற சூழலியலை எல்லாருக்குமாக என்ற பொது சிந்தனையுடனும், நாம் உருவாக்குகின்ற சட்டங்கள், விதிமுறைகள் எல்லோருக்கும் நன்மை விளைவிப்பதாக அமையட்டும் என்று முயற்சிப்போம். அப்பொழுது தான் கொடுப்பதில் நாம் ஒவ்வொருவரும் இன்பம் காண முடியும்.

ஒரு செடி முளைத்து தளிர்த்து, இலைகள், மொட்டு, பூக்கள், காய்கள், கனிகள் என்று தன்னை மானுட சமூகத்திற்கு கொடுத்து இன்பம் காண்கிறது. இந்த இயற்கை தத்துவத்தை ஏன் மனிதர்கள் நாம் மறந்து விட்டோம்? நாமும் கொடுப்பதற்காகவே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம். கொடுத்து வாழும் போது மட்டுமே கடவுளில் நாம் ஒருவராக முடியும். கடவுளாக இருந்த போதும் தன்னை ஏழ்மையாக்கி (பிலி.2: 6-8) எல்லாருக்கும் எல்லாமுமான குழந்தை இயேசுவை நாம் பின் தொடர்வோம். ஆட்டிடையர்கள், ஞானிகள், என்று எல்லாருக்கும் எல்லாமாக பிறந்த இயேசுவைப் போல் நாமும் எல்லாருக்குமானவர்களாக நம்மை மாற்றி கொள்ள முயற்சிப்போம்.

மறைமாவட்ட சமூகப் பணிகளில் ஆர்வத்தோடு பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து பிறப்பு திருவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் உடன் பயணத்தில் மகிழ்ச்சி காணும் நல்லுள்ளங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களோடு சேர்ந்து "கொடுப்பதில் இன்பம் காண" அழைக்கும் குழந்தை இயேசுவின் பிஞ்சு கரங்களில் தஞ்சமடைவோம்.

**அருட்தந்தை ஜோஸ் பிறைட்**

மார்த்தாண்டம் பேராலய பங்குதந்தை

# மிட்ஸ் வெள்ளி விழா
# திட்ட வெளியீடு மற்றும் திட்டம் ஆரம்பம்



மிட்ஸ் வெள்ளிவிழாவை முன்னிட்டு 13.10.2021 அன்று குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் மிட்ஸ் வெள்ளி விழா செயல்பாட்டு திட்டங்கள் துவங்கி வைக்கப்பட்டது. வெள்ளிவிழா செயல்பாடுகளை குறித்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விளக்கமளித்தார்கள். பின்னர் ஆயர் அவர்கள் 25 செயல்பாட்டு திட்டங்களை வெளியிட்டதுடன், அதில் ஒரு திட்டமான தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை துவங்கி வைத்து தேர்வு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மிட்ஸ் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.










## புதிய பணிமண்டலம் உதயம்...

மிட்ஸ் வெள்ளி விழாவை முன்னிட்டு 12.10.2021 அன்று மதுரை மறைபரப்பு பகுதியில் புதிதாக மிட்ஸ் பணிமண்டலம் துவங்கப்பட்டது. முதல் கட்டமாக மதுரையிலுள்ள வேடபுளியன்குளம் மற்றும் தேனியிலுள்ள தேவதானம்பட்டி ஆகிய இரு கிராமங்களிலும் மூன்று குழுக்கள் வீதம் இரண்டு அமைப்பாளர்களை கொண்டு ஆறு சுய உதவி குழுக்கள் துவங்கப்பட்டு உள்ளன. கூட்டத்தில் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் கலந்து கொண்டு புதிய மண்டல பணிகளுக்கான கணக்கு புத்தகங்கள் மற்றும் வங்கியில் தேவைப்படும் ஆவணங்களை வழங்கியதுடன் மதுரை மண்டல இயக்குநராக அருட்தந்தை பென்னட் மற்றும் அமைப்பாளர்களாக திருமதி.சுமதி (தேவதானபட்டி,தேனி), திருமதி.லட்சுமி (வேடபுளியன்குளம், மதுரை) ஆகிய இருவரும் செயல்படுவார்கள் எனவும் அறிவித்தார்கள். மேலும் சுய உதவி குழு பொறுப்பாளர்களுக்கு இயக்குநர் தலைமையில் சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டது. 91 குடும்பங்களுக்கு ஆடு, கோழி, விவசாயம் போன்ற சுய தொழில்கள் செய்ய ரூபாய் 7 இலட்சம் மதிப்பிலான சுழல் நிதி திட்டம் துவங்கி வைக்கப்பட்டது.







# வறுமையின் வாக்குமூலம்



என்னை வறுமையின் வண்ணத்தில்
வரைஞ்சது யாரோ
நாளுக்கு நாள் பசியின் பற்று கூடுது
பிறக்கும் போது உண்டான பசிக்கே
இன்னும் பதில் சொல்லி முடிக்கல

என் எலும்புக்கும் தோலுக்கும்
உள்ள நெருக்கம் கூடியிருச்சு
எப்பவோ தின்ன உணவ நெனச்சு
வாய் காற்று அசபோடுது
நாக்க தின்னலாமானு பல் யோசிக்குது
பல்லை கொஞ்சம் தடவி
நாக்கும் தன் பசிய போக்கிக்குது

பலநாள் கழிச்சு ஒரு ரொட்டிதுண்டு
எங்கிருந்தோ ஆசீர்வதிக்க வந்துருச்சு
பாதி பிரிச்சு கொடுத்தா
அம்மா உசுரு கொஞ்சம் ஓடுமுன்னு
மூளை சொல்றதுக்குள்ள
வாய் முழுசா தின்னுருச்சு
அவ உசுரும் போயிருச்சு

இன்னிக்காவது உசுர குடுப்பியானு
காற்று வந்து கேட்டுட்டு போகுது

இந்த உடல் எப்போ படையல் ஆகுமுன்னு
பருந்தும் மெல்ல பார்த்துட்டு போகுது
என்ன செய்ய உசுர எடுத்து
கொடுக்ககூட என்கிட்ட சக்தி இல்ல

ஆயுதம் தான் நாட்டின் வீரியம்
என்று நம்புற உலக தலைவர்களே
அந்த தொகையில ஒரு பருக்கையை
எங்க பசி தீர ஒதுக்குங்க - முடியலேனா
ஆயுதத்தை ஒருமுறை எங்க மீது பரிசோதித்து
அதன் தரம் அறிந்து கொள்ளுங்க......

பணம் ஒரு போதை பொருள்
பணத்திற்கு அன்பு பாசம் தேவையில்லை
உண்மையான அன்பை பணம்
வெறுத்துவிடும்
நம் வாழ்வை அதற்கு அடிமையாக்கி
விடும்

மது அடிமை கூட மீண்டெழுவான்
-ஆனால்

பண அடிமை மீண்டெழ கடினம்
உண்மையான அன்பை புரிந்தவர்கள்
மட்டுமே பண போதையில் இருந்து
தன்னை காப்பாற்றிக் கொள்வார்கள்.




**P.C. பார்த்திபன்**
*நாகர்கோவில் II கிளஸ்டர்*


உலகின் மிகச் சிறிய ரயில் நிலையத்தை கொண்ட நாடு வாடிகன்

# கொடிது கொடிது வறுமை கொடிது...



**கொ**டிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை என்றார் அவ்வையார். ஏதாவது ஒரு இடத்தில் வறுமையால் யாராவது பாதிக்கப்பட்டால் அவர்களது மனித உரிமை மீறப்படுகிறது என்கிறார் பிரான்சை சேர்ந்த ஜோசப் ரென்சிக்கி. இவரது சிறுவயது போராட்டத்தின் விளைவு தான் 1987 - ம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் நகரில் முதன்முதலாக வறுமை ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை, பயம் முதலியவற்றிற்கு பலியானவர் களை கவுரவிக்கும் வகையில் 10,000 பேர் டொர்கேட்ராவின் மனித உரிமை மற்றும் விடுதலை சதுக்கத்தில் ஒன்று கூடினர். 1992 -ம் ஆண்டு ஐ.நாவும் வறுமை ஒழிப்பு நாளை அதிகாரப்பூர்வமாக ஏற்றது.

## எது வறுமை

உணவின்மை மட்டும் வறுமை அல்ல. கல்வியின்மை, உடை, உறைவிடமின்மை, வேலையின்மை, சுகாதாரமின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, உரிய வருமானமின்மை, போதிய சத்துணவின்மை, கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை என வறுமைக்கு பல பரிமாணங்கள் உள்ளன. இது இடத்துக்கு இடமும், காலத்திற்கு ஏற்பவும் மாறுகிறது. பொதுவாக சமூகத்தால் உணரப் படக்கூடிய, அடிப்படை மனித உரிமை இழப்பே வறுமை ஆகும். இவை உணவு, உடை, தங்குமிடம் என பொருள் பரிமாணத்தை சார்ந்தவையாகவோ, பாலியல் மற்றும் சாதி வேற்றுமை போன்ற பொருள்சார் பரிமாணத்தை சார்ந்தவையாகவோ இருக்கலாம். பொதுவாக உணவின்மையே வறுமை என நம்பப்படுகிறது. நாட்டின் எதிர்கால தூண்களான இன்றைய குழந்தைகளின் நிலைமை கவலையளிப்பதாக உள்ளது. உலகிலேயே வங்கதேசத்தை அடுத்து இந்தியாவில் தான் சரியான சத்தான உணவின்றி வறுமையில் இறக்கும் குழந்தைகள் அதிகம் உள்ளனர்.

வறுமை,ஆடை இன்றி நிர்வாணமாக நிற்கிறது...



வளமை, உள்ளாடை தெரிய ஊர்வலம் செல்கிறது...

## இளமையில் வறுமை

வறுமையில் பலியாகும் குழந்தைகள் என்றால் நமக்கு ஆப்ரிக்க நாடுகள் தான் நினைவில் வரும். ஆனால் நம் நாட்டில் அதைவிட இரண்டு மடங்கு குழந்தைகள் வறுமையில் வாடுகின்றனர் என்பதே



உண்மை. இந்தியாவில் 100-க்கு 30 குழந்தைகள் பிறக்கும் போதே எடை குறைவாக பிறக்கின்றன. இதுவே ஆப்ரிக்க நாடுகளில் 100-க்கு 16 ஆக தான் உள்ளது. குழந்தை பருவத்தில் ஊட்டப்படும் சத்தான உணவே அவர்களின் பிற்கால வாழ்வில் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு அடித்தளமாகிறது. இதை ஒப்பிட்டு பார்க்கும் போது நம் குழந்தைகளின் இன்றைய நிலை அதிர்ச்சியாக உள்ளது.

## எது வறுமைக்கோடு

ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கை தரத்திற்கு கீழ் வாழும் மக்களை, ஏழ்மை நிலையில் அல்லது வறுமைகோட்டிற்கு கீழ் வாழ்பவர் என்கின்றனர். ஒரு நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகையில் வறுமையை போக்க முடியவில்லை என்றால் அந்த நாடு கடைபிடிக்கும் ஜனநாயகத்தால் பிரயோஜனம் இல்லை என்கிறார் நெல்சன் மண்டேலா. குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகின்றது. இந்த வருமான அளவு நாட்டிற்கு நாடு வேறுபடும். உணவை பொறுத்தவரை நகரில் உள்ள ஒருவருக்கு சராசரியாக 2100 கலோரி சக்தி அளிக்கும் உணவு கிடைக்க வேண்டும். இதற்கு கூட வசதி இல்லாதவர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்கின்றனர். உலக வங்கி தரவுகளின்படி, 14 பில்லியன் மக்கள் மிக வறுமைக்கோட்டின் மிக அடிமட்டத்தில் வாழ்கிறார்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது.


## வறுமைக்கு காரணங்கள்

அரசியல், பொருளாதாரம், கல்வி, வேளாண்மை என நம் நாடு எல்லாவற்றிலும் முன்னேறினாலும் வறுமையை ஒழிக்க முடியவில்லை. நடைமுறையில் இல்லாத பண்பாட்டோடும், பணத்தோடும் வாழ்பவர் ஒருபுறம். ஒரு வாய் தண்ணீர் இல்லாமல் இறப்பவர் மறுபுறம். காரணம் மனித மனம், சமய பிரிவினைகள், ஜாதி, சுயசம்பாத்தியத்தில் ஆர்வமின்மை, ஊழல் முதலியன இதற்கான சில காரணிகளாக உள்ளன. இதில் முக்கிய காரணியாக ஊழல் உள்ளது. குற்றங்கள் அதிகரிக்க வறுமையும் ஒரு காரணமாகிறது. வறுமை ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாயத்தில் வன்முறை குற்றங்களை தவிர்க்க முடியாது. எனவே வறுமை ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும். கல்வியால் மட்டுமே வறுமையை ஒழிக்க முடியும். தங்கள் வீடுகளில் வறுமை ஒழிந்து வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அவரவர் தங்கள் குழந்தைகளை அவசியம் கல்வி பயில வைக்க வேண்டும். பொது வினியோக திட்டத்தை விரிவுபடுத்தி உணவுபொருள் தடையின்றி வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் வங்கி கடன் வழங்க வேண்டும். இது போன்ற நடவடிக்கையால் வறுமையை ஓரளவு குறைக்க முடியும்.



## முன்மாதிரி தமிழ்நாடு

நிறைவான வயிறே தெளிவான சிந்தனைக்கும், வலுவான உடலுக்கும் ஆதாரம். இதை உணர்ந்து மதிய உணவுத் திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவு திட்டம், கலவை சாத திட்டம் என பள்ளிகளில் மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டங்களை பல காலமாக செயல்படுத்தி இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன் மூலம் மாணவர் எண்ணிக்கை




உலகில் அதிகமாக புத்தகம் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஐஸ்லாந்து நாட்டினர்

அதிகரித்ததுடன், படிப்பை பாதியில் நிறுத்துவதும் குறைந்து வருகிறது.

## உதவி செய்வோம்

"ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்" என்கிறார் வள்ளுவர். இதன் பொருள் தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்து கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்கு பிற்பட்டதாகும். நம் நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலம் தெரிவது உண்மை தான். ஆனால் தெரியும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி அற்புதங்கள் நிகழ்த்தி காட்ட வேண்டியது நமது பொறுப்பு. வறுமையினை ஒழித்தால் தான் மக்கள் வளமாக வாழ முடியும். தேசம் வல்லரசு ஆக முடியும். தனி ஒரு சமுதாயம் மட்டும் வளராமல் நாட்டு மக்கள் அனைவரும் வளம் பெற்றால் தான் நாம் வலிமை வாய்ந்த நாடாக மாற முடியும். அப்படிபட்ட பார் வியக்கும் பாரதத்தை படைப்பதற்கு நாம் ஒன்றுபடுவோம். உழைத்திடுவோம்.






07.10.2021 அன்று Change the Way We Care திட்ட பங்குதாரர்களின் கூட்டம் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் மிட்ஸ் கலையரங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூகத்தில் குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய சுதந்திரம், கல்வி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது எப்படி என்பது குறித்த ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கூட்டத்தில் CRS அமைப்பின் தேசிய இயக்குநர் திரு.செந்தில் குமார், தமிழக சமூகப்பணி மைய இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பிதுரை, துணைஇயக்குநர் அருட்தந்தை ஆரோக்கியசாமி, மார்த்தாண்டம் மறைமாவட்ட முதன்மை குரு Msgr. S. வர்க்கீஸ், மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், அருட்தந்தை மரிய அற்புதம், அருட்தந்தை அஜீஸ் குமார், அருட்தந்தை ஜோணி ஆல்பிரட், அருட்தந்தை ஜிபு மேத்யூ, மேரி மக்கள் சபையின் மாகாணத் தலைவி மதர். அனிலா கிறிஸ்டி, அருட்சகோதரி ஜெரின், அருட்சகோதரிகள், திரு. செல்லபாண்டி, திரு. அருளப்பா, திருமதி. ஜோமி, மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், பஞ்சாயத்து தலைவர்கள், திட்ட அமைப்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி கருத்தரங்கை சிறப்பித்தனர்.







# கெடுவதற்கு இவ்வளவு விஷயங்களா?

தொகுப்பு
**நிர்மலா**
தாளான்விளை சுய
உதவிக்குழு பொருளர்

பாராத பயிரும் கெடும் பாசத்தினால் பிள்ளை கெடும்
கேளாத கடனும் கெடும் கேட்கும் போது உறவு கெடும்
தேடாத செல்வம் கெடும் தெகிட்டினால் விருந்து கெடும்
ஓதாத கல்வி கெடும் ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்
சேராத உறவும் கெடும் சிற்றின்பன் பெயரும் கெடும்
நாடாத நட்பும் கெடும் நயமில்லா சொல்லும் கெடும்
கண்டிக்காத பிள்ளை கெடும் கடன்பட்டால் வாழ்வு கெடும்
பிரிவால் இன்பம் கெடும் பணத்தால் அமைதி கெடும்
சினமிகுந்தால் அறமும் கெடும் சிந்திக்காத
செயலும் கெடும்
சோம்பினால் வளர்ச்சி கெடும் சுயமில்லா வேலை கெடும்
மோகித்தால் முறைமை கெடும் முறையற்ற உறவும் கெடும்
அச்சத்தால் வீரம் கெடும் அறியாமையால் முடிவு கெடும்
உழுவாத நிலமும் கெடும் உழைக்காத உடலும் கெடும்
இறைக்காத கிணறும் கெடும் இயற்கையை அழிக்கும் நாடும் கெடும்
இல்லாலில்லா வம்சம் கெடும் இரக்கமில்லா மனிதம் கெடும்
தோகையினால் துறவு கெடும் துணையில்லா வாழ்வு கெடும்
ஓய்வில்லா முதுமை கெடும் ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்
அளவில்லா ஆசை கெடும் அச்சப்படும் கோழை கெடும்
இலக்கில்லா பயணம் கெடும் இச்சையினால் உள்ளம் கெடும்
உண்மையில்லா காதல் கெடும் உணர்வில்லாத இனமும் கெடும்
செல்வம் போனால் சிறப்பு கெடும் சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்
தூண்டாத திரியும் கெடும் தூற்றி பேசும் உரையும் கெடும்
காய்க்காத மரமும் கெடும் காடழிந்தால் மழையும் கெடும்
குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும் குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்
வசிக்காத வீடும் கெடும் வறுமை வந்தால் எல்லாம் கெடும்
குளிக்காத மேனி கெடும் குளிர்ந்து போனால் உணவு கெடும்
பொய்யான அழகும் கெடும் பொய்யுரைத்தால் புகழும் கெடும்
துடிப்பில்லா இளமை கெடும் துவண்டிட்டால் வெற்றி கெடும்
தூங்காத இரவும் கெடும் தூங்கினால் பகலும் கெடும்
கவனமில்லா செயலும் கெடும் கருத்தில்லா எழுத்தும் கெடும்

**தமிழ் மூதாட்டி ஔவையார் அழகாக கூறிய**
**இந்த அறுபதையும் அறிந்து கொண்டால்**
**நம் வாழ்க்கை கெடவே கெடாது.**


உலகில் மிக அதிகமான ஊழியர்களை பணியமர்த்தியுள்ள வங்கி இந்திய ஸ்டேட் வங்கி



# வறுமையின் மறுபக்கம்

இவர் நாகரீக ஆடைகளோ காலணிகளோ அணிந்து கொள்வதில்லை அவ்வளவு வறுமை. பார்த்தவர்கள் பலர் இவரை கேலி செய்தனர். சிலர் இரக்கம் காட்டினர். இவரோ கேலியை வெறுத்ததை போல இரக்கத்தையும் வெறுத்தார். ஒரு நாள் இவர் அழுக்கான உடைகளையும், கிழிந்த காலணிகளையும் அணிந்து கொண்டு வெளியே சென்றிருந்தார். இந்த கோலத்தில் இவரைக் கண்டான் நண்பன் ஒருவன். இவர் திரும்பி வீடு வந்து சேருவதற்குள் இவர் வீட்டிற்கு வந்தான். இவருக்கு தெரியாமல், ஒரு ஜோடி மூடு காலணிகளை சன்னல் வழியே இவரது அறைக்குள் போட்டான். நேரில் கொடுத்தால் அது இந்த மனிதரின் தன்மதிப்பை புண்படுத்துவதாகும் என்று அஞ்சி தான் அவன் இவ்வாறு செய்தான். இப்படி தெரியாமல் போட்டு விட்டு வந்தால், இவர் ஏற்றுக் கொள்வார் என்று நம்பினான்.

வெளியே சென்றவர் தன் இருப்பிடத்திற்கு திரும்பி வந்தார். பூட்டை திறந்து அறைக்குள் நுழைந்ததும்,அங்கே புதிய மூடுகாலணிகள் கிடப்பதை பார்த்தார். அவருக்கு உடனடியாக கோபம் பொங்கி விட்டது "என் வறுமையை பழிப்பதற்கு இதுவும் ஒரு வழியா?" என்று கொதித்தெழுந்தார். அந்த மூடுகாலணிகளை தூக்கி வெளியே எறிந்து விட்டார்.

எவ்வளவு வறுமை இருந்ததோ, அதை விட பன்மடங்கு தன்மதிப்பும் இவரிடம் இருந்தது. "இந்த காலணிகளை இங்கே போட்டவனுக்கு பொருட்செல்வம் அதிகமாக இருக்கலாம் ஆனால் என் அறிவுச்செல்வம் அதைவிடவும் உயர்ந்தது என்று பெருமிதம் கொண்டிருந்தவர் யார் தெரியுமா?

அவர் தான் **டாக்டர் சாமுவேல் ஜான்சன்.** ஆங்கில மொழிக்கு முதன்முதலில் ஒரு அகராதியை உருவாக்கி கொடுத்து அதை வளமிக்க மொழியாக மாற்றியவர். வறுமையில் வாழ்ந்தாலும் இவர் ஆங்கில மொழிக்கே ஆசானாகி விட்டார்.

## அறிந்து கொள்வோம்

குதிரை மீது மனிதர் இருப்பதை போன்ற சிலைகளை பார்த்திருப்போம். இப்படிப்பட்ட சிலைகளில் குதிரையின் முன்னங்கால்கள் இரண்டும் பீடத்தில் படாமல் தூக்கிய நிலையில் இருந்தால் அந்த மனிதர் போரினால் இறந்தவர் என்றும், ஒரு முன்னங்காலை மட்டும் தூக்கியிருந்தால் அவர் போரின் போது ஏற்பட்ட காயங்களால் இறந்தவர் என்றும், நான்கு கால்களும் தரையில் இருந்தால் இயற்கை மரணம் அடைந்தவர் என்றும் அர்த்தம்.






# போராடினாலும் மறுக்கப்படுகிறது...


இன்றைய கால கட்டத்தில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பல்வேறு நிலைகளில், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை களுக்காக போராடும் ஆர்வலர்கள், அமைப்புகள், மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நிலையில், அடிமட்ட ஏழை மக்களுக்கு இன்னும் போய் சேரவில்லை என்பது நிதர்சனம்.

இந்திய தத்துவ அறிஞர்கள், வாழ்க்கையில் சில நல்வொழுக்கங்களை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர். இன்று அவை உலகம் முழுவதும் பொதுவான ஒன்றாக கருதப்படுகிறது. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் முக்கியமாக எடுத்துரைக்கப்பட்டது. இவற்றின் நோக்கமே ஒரு ஒற்றுமையான சமூகத்தை உருவாக்குவதும் சமூக, ஆன்ம, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும். மனிதாபிமானிகள், பகுத்தறிவாளர்கள், நல்லொழுக்கவாதிகள் இப்படிப்பட்ட நன்னெறிகளை மனதில் கொண்டு அவர்கள் சட்டம் இயற்றினர்.

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் போது தான் மனித உரிமைகளின் தற்கால படிவம் புகுத்தப்பட்டது. இது இந்திய உரிமை போராட்டத்தின் போது உணர முடிந்தது. அந்நியர் ஆட்சிக்கு எதிராகவும் அடிப்படை உரிமைகளுக் காகவும் இந்தியர்கள் போராட துவங்கினர்.

அரசியலமைப்பு சட்ட அமைப்பு குழு, மனித உரிமைகளையும் அரசியலமைப்பில் சேர்க்க வேண்டும் என போராடியது. புதிய அரசியலமைப்பு சட்டம் 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ம் நாள் அமுலுக்கு வந்தது. இதன் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு சட்டத்தின் முன்னுரையாக செயல்படுகின்றன. அவை பகுதி 3 மற்றும் 4-ல் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1. சமத்துவ அல்லது சம உரிமை
2. ஆறு வகையான உரிமைகளை அனுபவிக்க உரிமை
   1. பேச்சுரிமை
   2. ஆயுதமின்றி அமைதியாக கூட்டம் நடத்த சுதந்திரம்
   3. சங்கங்கள் அமைக்க உரிமை



4. இந்திய எல்லைகளுக்குள் எவ்வித கட்டுப்பாடுமின்றி எங்கும் செல்ல உரிமை

5. இந்திய எல்லைகளுக்குள் எங்கு வேண்டு மானாலும் வாழ உரிமை

6. எந்த பதவி வகிக்கவோ, தொழில் செய்யவோ, வாணிபம், வியாபாரம் செய்வதற்கான உரிமை

3. சுய உரிமையோடு வாழ்வதற்கான உரிமை

4. எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமை

5. கல்வி, கலாச்சார உரிமைகள்

6. சொத்துரிமை

7. சுரண்டலை எதிர்க்க உரிமை

8. சட்டப்படி பரிகாரம் தேட உரிமை

மக்களாட்சி முறையில் வாக்குரிமை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மக்களின் விருப்பமே அரசின் அடித்தள அதிகாரம். இந்த மக்களின் விருப்பம், நேர்மையான தேர்தல்களின் மூலம் அவ்வப்போது நிறைவேற்றப்பட வேண்டும். தேர்தல்கள் பொதுவாக சமமான, இரகசியமான வாக்கெடுப்பு மூலம் நடைபெற வேண்டும்.



மனித உரிமைகளை அரசியல் அறிஞர்கள், அறநெறி உரிமைகள் என்றும் சட்ட உரிமைகள் என்றும் இரு பெரும் பிரிவாக பிரிக்கின்றனர். அறநெறி உரிமைகள் சட்டத்தால் அங்கீகரிக்க படாததாகும். சட்ட உரிமைகள் வாழ்வியல் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார



உரிமைகள் என்று பாகுபாடு செய்யப்படுகின்றன. இவைகள் அடிப்படை உரிமைகளாக சட்டத்தால் மதிக்கப்பட்டு காக்கப்படுகின்றன.

## மனித உரிமை மீறல்கள்

மக்களின் வீடுகள், விளைநிலங்கள், மற்றும் நீர் நிலைகள் ஆகியவற்றில் நச்சு வேதியியல் கழிவுகள் கலக்காமல் முன்னெச்சரிக்கையாக




தடுப்பதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தவறுவது வாழ்வுரிமை மீறலாகும்.

காவலரால் சந்தேகப்பட்டு அடித்தல், விலங்கிடல் மற்றும் சித்ரவதை செய்தல் ஆகியவை மனித மாண்பு மற்றும் உடல் பாதுகாப்புக்கு எதிரான மனித உரிமை மீறலாகும்.

ஒரு பெண் சிறைக்கைதி காப்பாளரால் கொடுமைப்படுத்தப்படுகிறாள் என்ற புகார் அடிப்படையில் குற்றவியல் நடுவர் நடவடிக்கை எடுக்க தவறுதல் சட்டப்படி சம பாதுகாப்பளிக்கும் உரிமை மீறலாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை தடுக்கின்ற உயர் ஜாதி மக்களுக்கு எதிராக மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க

மறுத்தால் அது பாகுபாடு சார்ந்த மனித உரிமை மீறலாகும்.



பணித்தளங்களில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம ஊதியம் கொடுக்கப் படுவதையும், பணி உயர்வில் சம வாய்ப்பு கொடுக்கப்படுவதையும் உறுதி செய்ய முதலாளி களுக்கான சட்ட வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த தொழி லாளர் துறையினர் புறக்கணித்தால் அது சம வாய்ப்பிற்கான உரிமை மீறலாகும்.

மனித உரிமைகள் மீறப்படுவதற்கான முக்கிய காரணம் மக்களின் ஆதிக்க மனப்பான்மை ஆகும். மேலும் இந்தியாவில் வறுமை ஒரு சாபக்கேடாக உள்ளது. வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தாங்கள் வாழ்வதற்கே போராடி கொண்டிருக்கும் போது மனித உரிமைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. கொத்தடிமை, குழந்தை தொழிலாளர், குறைந்த ஊதியம் போன்ற மனித மீறல்களைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. எனவே சுரண்டல்காரர்கள், பிற்போக்கு சக்திகளின் வஞ்சக வலையில் எளிதில் வீழ்ந்து விடுகிறார்கள். மேலும் கல்வி அறிவின்மை, சிக்கலான சட்ட நடைமுறைகள், சமூக மாற்றம், சாதி மற்றும் மக்களின் பொறுமை இழப்பு ஆகிய காரணங்களாலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன.



மனித உரிமைகள் என்பது இயற்கையாகவே தொடுக்கப்பட்ட உரிமையாகும். தாயின் வயிற்றிலிருந்து மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு மனித உயிரும் தன்னுடைய அடிப்படை உரிமைகளோடு பிறக்கிறது. மனித உரிமைகள் என்றால் என்ன என்ற கேள்விக்கு பன்னாட்டு மனித உரிமைகள் சாசனத்தின் பதில், சம உரிமையும், சுதந்திரமும் பிறக்கும் போதே உடன் பிறக்கின்றன. யார் ஒருவரையும் இனம், நிறம், மொழி, மதம் மற்றும் பிறப்பால் பாகுபாடு செய்யக்கூடாது. யாரும் யாருக்கும் அடிமை இல்லை. யாரும் சித்ரவதைக்கு உட்படலாகாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். நியாயமின்றி யாரையும் தடுத்து வைக்க கூடாது. நீதிமன்றத்தை அணுகி குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவரை நிரபராதி என கருதப்பட, அந்தரங்கங்களை பாதுகாக்க, சட்டத்துக்கு உட்பட்டு அனைத்து இடங்களுக்கும் செல்ல,சித்ரவதையிலிருந்து தப்பிக்க, புகலிடம் கேட்க, தேசிய அடையாளம் கேட்க, குடும்பம் நடத்த, சிந்தனை, சமய, கருத்து, மக்களாட்சி சேர்ந்திருக்க சமூக பாதுகாப்பு, விளையாட, ஓய்வெடுக்க, கல்விக்கு மற்றும் உணவுக்குள்ள உரிமைகள் மனித உரிமை களாகும்.

மீறப்படுகின்ற உரிமைகளைக் காக்கின்ற வழிமுறைகள் இல்லையென்றால் மனித உரிமைகளால் பயனில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றபோது சட்ட ரீதியான பாதுகாப்பரண்கள் இல்லை யென்றால் மக்களுக்கு மனித உரிமைகளை அளித்தலால் பயனில்லை. **"மற்றவர்கள் உன்னை எவ்வாறு மதிக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ, அதே மதிப்பை நீயும் அவர்களுக்கு அளி"** என்னும் அடிப்படை தத்ததுவத்தை மனதில் கொண்டு மனித உரிமைகளை காப்போம்.

திரு. **M.G. பேட்ரிக்**
*ஒருங்கிணைப்பாளர், மிட்ஸ்*



உலகின் முதல் பல்கலைகழகம் கி.மு.700-ம் வருடம் தட்சசீலாவில் கட்டப்பட்டது.

# பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ....

தளிர்கள் உலக திட்டத்திலிருந்து விடைபெற்று சென்ற மாணவர்களை ஒன்றிணைக்கும் ஆஸ்தி என்ற அமைப்பின் கூட்டமானது 16.10.2021 அன்று இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சிகளும், விளையாட்டுகளும் நடத்தி மாணவர்களை மகிழ்வித்தார்கள். பின்னர் இயக்குநர் அவர்கள் இத்திட்டத்தின் வழியாக பயன் பெற்ற மாணவர்கள் ஒழுக்கத்துடனும், கல்வி மற்றும் ஒழுக்கங்களில் சிறந்தவர்களாக பிற மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ வேண்டும் என்று கூறினார்கள். பின்னர் மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. இக்கூட்டமைப்பு கூட்டத்தில் மொத்தம் 33 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.





08.10.2021 அன்று குடும்ப வளர்ச்சி பொன் விழா வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு வீடுகளில் பதிப்பதற்காக திட்டத்தின் பெயர் பொறிக்கப்பட்ட கற்களை இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் திட்ட அலுவலர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.





17.10.2021 அன்று தேனீ வளர்த்தல் பயிற்சியானது தச்சூர்கோணம் பகுதியில் வைத்து திரு.சசன்குமார் அவர்களால் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



18.10.2021 கோல்பிங் சார்பாக அன்று மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்காக ஒரு உறுப்பினருக்கு ரூபாய் 12,000/- வீதம் 5 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபாய் 60,000/-க்கான காசோலைகள் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களால் வழங்கப்பட்டது.



04.11.2021 அன்று குளச்சலில் நடைபெற்ற தேசிய அளவிலான கோல்பிங் தின விழாவில் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப், ஒருங்கிணைப் பாளர் திரு. சஜிகுமார், திருமதி. புஷ்பலதா, ஆனிமேட்டர்கள் மற்றும் 50 கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

24.11.2021 அன்று மார்த்தாண்டம், களியக்காவிளை மற்றும் நாகர்கோவில் பணி மண்டலங்களில் உள்ள 125 தன்னார்வலர் களுக்கு காரிதாஸ் இந்தியா வழங்கிய மெடிக்கல் உபகரணங்கள் அடங்கிய பெட்டி வழங்கப்பட்டது





05.11.2021 அன்று காரிதாஸ் இந்தியா, CRS, டாசோஸ் மற்றும் மிட்ஸ் இணைந்து வழங்கிய மெடிக்கல் கிட் பாக்ஸ்களை மிட்ஸ் பணிமண்டலங்களில் உள்ள 48 தன்னார்வலர் களுக்கு இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் வழங்கினார்கள்.




## கடி ஜோக்ஸ்

"நேத்து ராத்திரி நான் என் மனைவியை கைநீட்டி அடிச்சிட்டேன்".

அய்யோ அப்புறம் என்னாச்சு சார்

"அதுக்குள்ள என் மனைவி என்ன எட்டி உதைச்சி வேலைக்கு போக நேரமாச்சு எந்திரின்னு கனவை கலைச்சிட்டா?.





உலகிலேயே மிகப்பெரிய ஏரி ஈரானில் உள்ள காஸ்பியன் ஸீ

# மிட்ஸ் ஐக்கியங்களின் வருடாந்திர கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் விழா













மிட்ஸ் நிறைவாழ்வு சங்கத்தின் பொறுப்பாளர்களின் கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் விழாவானது ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. 2021-ம் ஆண்டில் மறைமாவட்ட வெள்ளி விழா, மிட்ஸ் வெள்ளி விழா மற்றும் நிறை வாழ்வு சங்க கிறிஸ்மஸ் விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் 13.12.2021 அன்று மிட்ஸ் கலையரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழக சமூகப் பணி மைய இணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி, மார்த்தாண்டம் மேரி மக்கள் சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி அனிலா கிறிஸ்டி, ஐசிஐசிஐ வங்கியின் மார்த்தாண்டம் கிளை மேலாளர் திரு.தியாகராஜன், தமிழக பெண்கள் கூட்டமைப்பின் செயலர் திருமதி. சோபனா, MCA தலைவர் திரு. பால்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விருந்தினர்களை வரவேற்றார்கள். பின்னர் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸின் ஓராண்டு செயல்பாடுகளை விளக்கினார்கள். மதர் அனிலா கிறிஸ்டி அவர்கள், பெண்களின் பணியானது குடும்பங்களிலிருந்து துவங்க வேண்டும் என்றும், தன் சுத்தம், குடும்ப தலைவனுக்கான பணிகளை சிறப்பாக செய்தல், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினரோடு உரையாடுதல், ஜெபித்தல் போன்ற நற்காரியங்களை சிறப்பாக செய்தால் மட்டுமே பெண்கள் சமூக பணிகளை சிறப்பாக செய்ய முடியும். எனவே சமூக பணி செய்வதற்கு முன்பாக குடும்பத்தை சிறப்பாக வழிநடத்த பெண்கள் கற்று கொள்ள வேண்டும் என்றும் அனைத்து பெண்களும் சுய தொழில் ஒன்றை கற்று கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள். மேலும் அருட்தந்தை ஆரோக்கிய சாமி, திரு.தியாகராஜன், திருமதி.சோபனா, திரு.பால்ராஜ் ஆகியோர் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அளித்து கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தார்கள். பின்னர் மூன்று சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு குழுவிற்கு தலா 10 இலட்சம் வீதம் 30 இலட்சத்திற்கான காசோலைகளை ஐசிஐசிஐ வங்கி மேலாளர் குழு பொறுப்பாளர்களிடம் வழங்கினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்தின் ஆண்டறிக்கையை வெளியிட மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு ஏழைகளுக்கு வழங்குவதற்காக அனைத்து சுய உதவி குழுக்களிலிருந்தும் போர்வைகள், லுங்கிகள், வேஷ்டிகள், சேலைகள், நைட்டிகள் மற்றும் டவல்கள் ஆகிய பொருட்களை பொறுப்பாளர்கள் சேவை மனதுடன் கொண்டு வந்திருந்தனர். பின்னர் ஒழுங்காக கிளஸ்டர் கூட்டங்களில் கலந்து கொண்ட பொறுப்பாளர்களுக்கும், ஐக்கிய சுடர் குறுக்கெழுத்து போட்டிகளில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் தேசிய கீதத்துடன் விழாவானது நிறைவுற்றது. இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் தலைமையில் ஒருங்கிணைப்பாளர் திரு.M.G.பேட்ரிக் ஆன்றனி மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆட்டோ அரசிகள்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் வெள்ளிவிழா திட்டமாக மிட்ஸ் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட **“ஆட்டோ அரசி”** திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பயனாளிகளுக்கு மறைமாவட்ட வெள்ளிவிழா நிறைவு விழாவில், ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி மற்றும் புதிய ஆட்டோ வாங்குவதற்கான கடன் உதவிகளும் வழங்கப்பட்டன. அதன்படி மறைமாவட்ட ஜூபிலி நிறைவு விழாவில் உயர் பேராயர் கர்தினால் பசிலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கா ஆண்டகை அவர்கள் ஆறு பெண்களுக்கும் ஆட்டோக்களுக்கான சாவியை வழங்கியதுடன், ஆட்டோக்களை இயக்கி வைத்து இத்திட்டத்தை சிறப்பித்தார்கள்.









# முடியாதென்பது எதுவுமில்லை

கொரோனா நோய்தொற்று காலகட்டத்தில், நடைமுறைப்படுத்தப்பட்ட முழு அடைப்பின் போது மக்கள் பலரும் மனஉளைச்சலுக்கு உள்ளான நிலையில் அலைபேசி வாயிலாக தேவைப்படும் மக்களிடம் ஆற்றுபடுத்துதலுக்காக காரிதாஸ் இந்திய - சமூகப்பணி நிறுவனமானது SUDHIR என்ற திட்டத்தை தன்னார்வலர்களின் துணையோடு அறிமுகப்படுத்தியது. இவர்களில் ஒருவர்தான் திருமதி. பின்சிலாமேரி. ஆறாம் வகுப்பு வரை படித்துள்ள இவர், கோவிட்-19 அலையினால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கொரோனா குறித்த விழிப்புணர்வினை அளித்ததுடன் மட்டுமல்லாமல், அவ்வாறு தொடர்பு கொண்ட போது உடல் நலகுறைவால் அவதியுற்ற ஒரு குடும்பத்தை மருத்துவமனைக்கு அழைத்து சென்று அந்த குடும்பத்தில் உள்ள அனைவரையும் கோவிட்-19 பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். பரிசோதனை முடிவில் அந்த குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தொற்று இருந்தது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவர்களை சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற காரணத்தால் அந்த குடும்பம் கொரோனாவிலிருந்து மீண்டது. இதுபோன்ற மேலும் பல சமூக செயல்பாடுகளில் தன்னார்வத்தோடு தன்னை ஈடுபடுத்தி வரும் திருமதி. பின்சிலாமேரி அவர்களின் சேவைமனதை பாராட்டி காரிதாஸ் இந்தியா நிறுவனம் சிறந்த தன்னார்வலருக்கான கவுரவ பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது. மிட்ஸ் நிறுவனம் சார்பில் அவரது சேவையை பாராட்டி மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் மிட்ஸ் ஆண்டுவிழா கொண்டாட்டத்தின் போது விழாமேடையில் சால்வை அணிவித்து கவுரவித்து வாழ்த்தினார்கள்.



04.12.2021 அன்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு L'Oeuvre D'Orient திட்டத்தின் வழியாக உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.




26.11.2021 அன்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 115 குடும்பங்களுக்கு Forderverein திட்டத்தின் வழியாக உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.





**R. அனிஷா**
வகுப்பு - 12







**A. ஸ்னோ மெர்பின் ஜெனிக்ஷா**
வகுப்பு - 11



**E.M. அனு வைஷாலி**
வகுப்பு - 8






பொண்ண எங்களுக்கு ரொம்ப புடிச்சு போச்சு. மாப்பிளைக்கு என்ன போடுவீங்க?

இப்ப எல்லாருமே மாஸ்க் தானே போடுறாங்க. அதையே ரெண்டு பேருக்கும் ஒரு வருஷத்துக்கு வாங்கி குடுத்திடுறோம்.

**நோயாளி :** இடது கால் முட்டி ரொம்ப வலிக்குது டாக்டர்.....

**டாக்டர் :** வயசு ஆயிடுச்சு அதான்

**நோயாளி :** வலது காலுக்கும் அதே வயசு தானே ஆச்சு டாக்டர்

**டாக்டர் : ????**

இந்த மிச்சர் பாக்கெட் என்ன விலை?

"பத்து ரூபா".

லூசுன்னா எவ்ளோ??

"எல்லாருக்கும் ஒரே விலை தான்பா".

கல்யாணம் முடிஞ்ச இரண்டாவது நாள்.... பொண்ணுக்கு அலங்காரம் செய்த பியூட்டி பார்லர் அக்காவை தேடி போய் பரிசு கொடுத்தார் மாப்பிள்ளை.... Apple iPhobe 7 Box அவர் கைல.....

பார்லர் அக்காவுக்கு ஒரே சந்தோஷம். சிரிச்சுகிட்டே டப்பாவ பிரிச்சா உள்ள நோக்கியா 1100.

அக்கா பேந்த பேந்த முழிக்க மாப்பிள்ளை எரிச்சலோடு சொன்னார்....

இப்படி தானே இருந்திருக்கும் எனக்கும்.....

# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் அறிவிற்கு ஒரு சவால்**

### இடமிருந்து வலம்

1. தொங்கும் தோட்டம் அமைந்துள்ள இடம் (4)
2. வெப்பத்தை குறைவாக ஈர்க்கும் நிறம் (3)
5. குடிமக்கள் காப்பியம் என்று பாராட்டப்படும் நூல் (8)
7. மகாத்மா காந்தியின் இறுதி பிரார்த்தனை நடந்த இடம் (7)
8. கடல் ஆழத்தை கண்டுபிடிக்க உதவும் சாதனம் (3)
9. செம்புடன் தகரத்தை கலக்கும் போது எது உருவாகிறது (5)
12. பகலில் தெரியும் நட்சத்திரம் (4)
14. திரவ தங்கம் எனப்படுவது (4)
16. யூதர்களின் புனித நூல் (2)
17. உப்புநீரை குடிநீராக மாற்ற உதவும் வேதிப் பொருள் (5)
18. ஓட்டம் ஆங்கில பெயர் (2)
20. மலேரியா கொசுவால் பரவுகிறது என்பதை கண்டறிந்தவர் (6)

### மேலிருந்து கீழ்

3. உணவை முகர்ந்து பார்க்க தனது நாக்கை பயன்படுத்தும் உயிரினம் (3)
6. சீனாவின் தேசிய சின்னம் (4)
11. ஒரு மீட்டரில் மில்லியனில் ஓர் பங்கு என்பது (4)
13. ஜப்பானிய பாராளுமன்றத்தின் பெயர் (3)

### வலமிருந்து இடம்

4. மின்சாரத்தின் அலகு (2)

### கீழிருந்து மேல்

10. எழுத பயன்படும் உலோகம் (4)
15. கரியின் பளபளப்பான வடிவம் எது (3)
16. வெற்றி எதிர்ச்சொல் (3)
19. இந்தியாவின் பூந்தோட்டம் என்று அழைக்கப்படும் இடம் (5)
21. இந்தியாவின் மிக முக்கிய போர் பீரங்கியின் பெயர் (4)

1 2 3 4
5 6
7
8 9 10
11 12 13
14 15
16 17
18 19 20 21


உலகத்தின் முதல் பத்து உயரமான மலைச்சிகரங்கள் இமயமலை தொடரில் தான் உள்ளது

**குறிப்பு :** சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் ஜனவரி 31. அதற்கு பின் வரும் விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கட் செய்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**முகவரி :** ஆசிரியர், ஐக்கியசுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629163, தமிழ்நாடு.

**2021 செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியில் பங்கு பெற்றோர்**

திருமதி. T. நிஜா, மிட்ஸ் ராஜீவ்காந்தி நகர் சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்
திருமதி. ஷீலா, வலிய விளாகம் சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்

**செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்**

**திருமதி. ஷீலா, வலிய விளாகம் சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்**

**பரிசுகள் ஆண்டிறுதியில் வழங்கப்படும்.**
**போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்ற அனைத்து சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.**

# கோல்பிங் தின கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் சார்பாக 30.10.2021 அன்று கோல்பிங் தின விழா மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் சிறப்பு செய்தி அளித்து பரிசுகள் வழங்கினார்கள். திரு.றோஸ் றோபின் அவர்களால் **"பாரம்பரிய சமூகங்களின் நிலையான வாழ்வாதாரத்திற்கான சூழியல் பாதுகாப்பு"** குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் கோல்பிங் செயல்பாடுகளை பற்றி விளக்கமளித்தார்கள். இவ்விழாவில் MCA தலைவர் திரு.பால்ராஜ், செயலர் திருமதி. மரிய சுதா, திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 287 கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




# தளிர்கள் உலக கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டம்...

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான கிறிஸ்மஸ் விழாவானது 11.12.2021 அன்று மிட்ஸ் கலையரங்கில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவில், மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை வகிக்க தமிழக சமூகப்பணி மைய இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை மற்றும் குமரி மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் திரு.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். திரு.ஜெயப்பிரகாஷ் அவர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளிலிருந்து அவர்களை காப்பாற்றும் முறைகள், அதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் ஆகியன குறித்து விளக்கமளித்தார்கள். ஆயர் அவர்கள் தமது உரையில் தற்போதைய குழந்தைகள் ஊடகங்களுக்கு அடிமையாகி பல்வேறு தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி வருகின்றனர். அலைபேசியின் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. எனவே குழந்தைகள் ஊடகங்களை நல்ல காரணங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் இந்த கிறிஸ்து பிறப்பு அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமையட்டும் என்றும் வாழ்த்தினார்கள். மேலும் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை மற்றும் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் ஆகியோர் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் ஆயர் அவர்களால் கிறிஸ்மஸ் கேட் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிரப்பட்டது. இடையிடையே மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து குமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 பஞ்சாயத்துகளை சேர்ந்த 10 பயனாளிகளுக்கு கழிவறை கட்டுவதற்காக CRS மற்றும் தமிழக சமூகப்பணி மையமும் இணைந்து குடும்பத்துக்கு ரூபாய் 12,000/- வீதம் மொத்தம் ரூபாய் 1,12,000/- க்கான காசோலைகளை தமிழக சமூகப்பணி மைய இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை அவர்கள் வழங்கினார்கள். விழாவில் மாணவர்கள், மண்டல வாரியாக வீணான பொருட்களிலிருந்து பயனுள்ள பொருட்களை செய்து கண்காட்சிக்கு கொண்டு வந்திருந்தனர். நிறைவில் பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையும்,கண்காட்சி மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும், கிறிஸ்மஸ் பரிசுகளும் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டன. பின்னர் மதிய உணவுடன் விழா நிறைவு பெற்றது.
















உலகமெங்கும் நொடிக்கு 50-100 பெரிய மின்னல்கள் வானிலிருந்து பூமியில் விழுகின்றன.



# குழந்தைகள் கவனத்திற்கு...

அன்பான குழந்தைகளே! இன்றைய சமூகம் என்பது "டிஜிட்டல் சமூகம்" ஆக மாறி விட்டது. வாலிப வயதில் உங்களை நிலை குலைய வைக்கும் அநேக சிந்தனைகளும், படங்களும், காணொலி காட்சிகளும் எவ்வித தடையுமின்றி கிடைக்கும் காலம் இது. குறிக்கோளோடு இருப்பவர்கள் இதை தாண்டி கடந்து சென்று விடுவார்கள். சிலருக்கு குறிக்கோள்கள் இருந்தும், ஊடகங்களின் தூண்டுதலில் சிக்கி விடுகிறார்கள். திரைப்படங்களில் வரும் பாடல்களும், இளமையை தூண்டும் வகையில் அமைந்து விடுகிறது. உண்மையான வாழ்க்கை இதுவல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

தற்போதைய சூழலில், சமூக ஊடகங்கள் தவிர்க்க முடியாத ஒன்று. அன்பான குழந்தைகளே அதை பயன்படுத்தும் போது மிகவும் கவனமாக கையாள பழகுங்கள். 13 வயதினிலே, எதிர் பாலின ஈர்ப்பும், காதல் உணர்வு வருவதும் இயல்பானது. அந்நேரத்தில் மனம் திருமண பந்தத்திற்கு தயாரானாலும், உடல் அதை ஏற்கும் நிலையில் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கயள். 21 வயது வரை காதல் உணர்வை ஓரங்கட்டி விட்டு, மனதை உங்கள் கட்டுப்பாட்டில் வைக்க பழகிக் கொள்ளுங்கள். படிப்பு மற்றும் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு முன்னுரிமை கொடுங்கள். ஒரு



பெண்ணோ, ஆணோ உன்னை காதலிக்கிறேன் என்றால் வீழ்ந்து விடாதீர்கள். உங்கள் குறிக்கோள் உங்கள் கண்முன்னே நிற்கட்டும்.

13 வயதில் சிறுவர், சிறுமிகளுக்கு "ஹார்மோன்கள் வேலை செய்ய துவங்கி விடும். இந்த நேரத்தில் ஆண், பெண் இருபாலினருக்கும் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது ஒரு வித ஈர்ப்பு தோன்றும். இது இயல்பாக எல்லா மனிதர் களுக்கும் தோன்றுவது தான் அவ்வாறு தோன்றவில்லை எனில் உடலளவில் ஏதோ பிரச்சனை என்று மருத்துவரை பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும்.

ஹார்மோன்கள் ஒருவரை ஒருவர் திரும்ப திரும்ப பார்க்க வேண்டும் என்று சொல்லும், அடிக்கடி பேச வேண்டும் என்று சொல்லும், அலைபேசி எண்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என சொல்லும். தகவல்களை பரிமாறி கொள்ளச் சொல்லும். ஹாய் என்ற தகவல் வந்து விட்டாலே போதும், ஆயிரம் பட்டாம் பூச்சி பறப்பது போன்ற உணர்வு தோன்றி நின்ற இடத்திலிருந்து பறந்து சென்று விடுவார்கள். ஒருவர் குரலை இன்னொருவர் கேட்டாலே இரண்டு பேருக்கும் தேவாமிர்தமாக இருக்கும். நேருக்கு நேர் பார்த்து கொண்டு பேசினால் ஆயிரம் ரோஜா பூத்துக் குலுங்கி மேலிருந்து இறங்கி வந்தது போல் இருக்கும். எங்கேயாவது சுற்ற செல்லலாமா என்று மனது நினைக்கும். அடுத்த கட்டத்தில் சென்றும் விடுவார்கள் யாருக்கும் தெரியாமல். இதில்



பெண்களை பார்த்தால், என் காதலனுடன் தானே செல்கிறேன் என்கிற அசட்டு தைரியத்தில் அவன் அழைக்கும் இடத்திற்கு சென்று விடுவாள். அவன் கூட்டிச் செல்லுமிடத்தில் 20 நபர்கள் இருப்பார்கள். இது தான் பொள்ளாச்சியில் நடந்தது. 21 நபர்கள் அந்த சிறுமியை சீரழித்ததை காணொலி காட்சியாகவும் மாற்றிக் கொண்டார்கள். அச்சிறுமியின் பெற்றோருக்கு அந்த வீடியோவை அனுப்பி இலட்சம் இலட்சமாக பணத்தை கறந்து கோடீஸ்வரர்கள் ஆகிவிட்டார்கள். பெண்கள் தன்னிச்சையாக எடுக்கும் இந்த முடிவுகளால், தங்கள் மானத்தை பறி கொடுப்பதோடு, தங்கள் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களை அவமானத்தின் உச்சிக்கு கொண்டு செல்கின்றனர்.

உங்களின் இந்த தவறான முடிவுகள் முதலில் உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக தோன்றினாலும்,

நாட்கள் செல்ல, செல்ல நீங்கள் எதையெல்லாம் இழந்தீர்கள் என்பதை நினைத்து வருந்த வேண்டிய நிலை ஏற்படும். ஒரு முறை இழந்த பள்ளி மற்றும் கல்லூரி வாழ்க்கையை யார் நினைத்தாலும் திரும்ப கொண்டு வர இயலாது.


நீங்கள் குறிக்கோள் உடையவர்கள். தெளிவாக இருங்கள். எந்த ஆணின் தோளுக்காகவும் ஏங்காதீர்கள். உங்களுக்கென்று இலட்சியம் இருக்கிறது. பெண்மை என்ற பேராற்றலை இயற்கை உங்களுக்கு கொடுத்துள்ளது. எந்த இலட்சியத்தை அடைய நினைக்கிறீர்களோ அதை நோக்கி ஓடுங்கள். இலட்சியத்தை எட்டியவுடன் நீங்கள் விரும்பிய வாழ்க்கையும், ஏன், அதை விட மேலான மகிழ்ச்சியும் உங்களை தேடி வரும்.



**திருமதி. T. வினிதாராணி**
ஒருங்கிணைப்பாளர், CSP

09.10.2021 அன்று மிட்ஸ் அரசி திட்டத்தின் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. திரு.றோஸ் றோபின் அவர்கள் பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டுதல் பயிற்சி வழங்கினார்கள். இக்கூட்டத்தில் 16 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.





# புற்றுநோயில்லா உலகம் படைத்திட...

புற்றுநோயானது இன்று உலகம் முழுவதும் பல்லாயிரகணக்கான உயிர்களை அழித்து வருகிறது. அதனை முற்றிலும் ஒழிக்கும் வகையில் பல்வேறு வகையான விழிப்புணர்வு பிரச்சாரங்களை உலக நாடுகள் செயல்படுத்தி வருகின்றன. நமது நாட்டிலும் புற்றுநோயால் இறப்பவர்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. அதனை தடுக்கும் வகையில் மிட்ஸ் நிறுவனம் காரிதாஸ் இந்தியாவுடன் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. 11.12.2021 அன்று எழுவோம் இயக்க புற்றுநோய் விழிப்புணர்வு துவக்க விழாவானது தமிழக சமூகப் பணி மைய இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்று விழாவின் நோக்கம் குறித்து கூறினார்கள். இவ்விழாவில் கிரேஸ் கல்வி நிறுவனத்தின் உறைவிட மருத்துவர் திரு. சிட்னி ஹோப்பர் அவர்கள் கலந்து கொண்டு புற்றுநோயை உண்டாக்கும் காரணிகளையும், புற்றுநோய் வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும், பெண்களுக்கு புற்றுநோய் பரிசோதனையின் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார்கள். பின்னர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை அவர்கள் துரித உணவின் தீமைகளையும் , அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் எடுத்து கூறி மக்கள் துரித உணவுகளை தவிர்க்க வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கினார்கள். பின்னர் புற்றுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டு விழாவானது முடிவுற்றது. இவ்விழாவில் 600-க்கும் மேற்பட்ட பெண்கள் ஆவலுடன் கலந்து கொண்டனர்.









உலகில் 3,50,000 -க்கும் அதிகமான தாவர வகைகள் உள்ளன.

# ஒரு குழந்தையின் குமுறல்கள்...

**J. சினி ஜாண்**
*வகுப்பு XI*




ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி விருப்பு வெறுப்புகள் இருக்கும். அதை குறை சொல்லும் பெற்றோர்களும் உண்டு, நல்வழியில் நடத்தி செல்பவர்களும் உண்டு. எங்களுக்கான குறிக்கோளை உருவாக்குவது எங்கள் உரிமை. அதன் நன்மை, தீமையை எடுத்துரைத்து வழிகாட்டுவது பெற்றோராகிய உங்களின் கடமை. குழந்தைகளாகிய நாங்கள் உங்களின் அன்பான வழிநடத்துதலையே விரும்புகிறோம். சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை, குழந்தையாக பார்க்காமல் ஒரு இயந்திரமாக பார்க்கிறார்கள். தங்களால் சிறு வயதில் சாதிக்க முடியாததை தங்கள் குழந்தைகளிடம் திணிக்கிறார்கள். அதை நிறைவேற்றாத போது அக்குழந்தையிடம் தங்கள் எரிச்சலையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்தி அவர்களை வெறுத்து ஒதுக்குகின்றனர். உண்மையில், பெற்றோர் எதிர்பார்க்கும் திறமை அந்த குழந்தையிடம் இல்லாமலிருக்கலாம். இதனால் அக்குழந்தை உளரீதியாகவும், மன ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டு பெற்றோரை வெறுக்க ஆரம்பிக்கும். பெற்றோரை ஒரு மிருகமாக பார்க்க துவங்கும்.

ஒரு நாள் 10 நிமிடங்கள் எங்களோடு அமர்ந்து, எங்களை பேச வைத்து கேட்பதும், அதற்கு பதிலளிக்கவும் நேரம் ஒதுக்கினாலே போதும். எங்களுக்கும் உங்களுக்குமான அன்புறவு நீடித்து நிற்கும்.

எங்களுக்கு பிடித்த செயல்களை செய்து காட்டும் போது நன்றாக இருந்தாலும், மோசமாக இருந்தாலும் அதை பாராட்டுவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதை குறித்து ஒரு சில கருத்துக்களை கூட பகிர்ந்து கொண்டால் மகிழ்ச்சி இரட்டிப்பாவதுடன் எங்கள் திறமைகள் மேம்படவும் அது வழிவகுக்கும்.

**சிறுவர்களாய் இருந்த போது பென்சில் உபயோகித்தோம் பெரியவர்களாய் ஆன போது பேனா உபயோகிக்கிறோம் ஏன் தெரியுமா?**
**சிறு வயதில் செய்த தவறுகளை அழிக்க முடியும் - ஆனால்**
**வயதான பின் செய்த தவறுகளை அழிக்க முடியாது.**


அன்பான பெற்றோரே நலமான சமூகம் அமைய நல் மனிதர்கள் தேவை. குழந்தைகளாகிய எங்களை சுதந்திரமாகவும், மனத்துணிவோடும், நல்ல உள நலன்களோடும், தவறுகள் செய்யாத நல்ல குழந்தைகளாக வாழ வழிகாட்டுங்கள்.






# சாதனை பெண்கள்...

அவளுக்கு வயது 35. பண்பான குணம். பாசமுள்ள கணவன். முத்துக்கு முத்தாக இறைவன் கொடுத்த மழலைகளாக மூன்று பெண் குழந்தைகள். இயற்கை எழில் கொஞ்சும் கொட்டாரம்



கிராமத்தில் சிறு குடிலானாலும் விவசாய வேலை செய்து யாதொரு குறையும் இன்றி நிம்மதியோடு வாழ்க்கை ஓடத்தை ஓட்டி சென்றார் நாகேஸ்வரியின் கணவர். தனக்கு ஒரு ஆண் வாரிசு வேண்டும் என்ற ஏக்கத்தில் இருந்த குடும்பத்திற்கு அடுத்ததாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த குடும்பத்தினர் பிறந்த குழந்தையை சீரும் சிறப்புமாக தாலாட்டி வளர்த்தனர். குழந்தை பிறந்து 45 நாள்கள் ஆகியிருந்த நிலையில் திடீரென அந்த அசம்பாவிதம் நடந்தது.

நன்றாக வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றிய நாகேஸ்வரியின் கணவர் திடீரென மாரடைப்பால் மரணமடைந்தார். திடீரென ஏற்பட்ட இந்த பேரிழப்பால் நாகேஸ்வரியின் குடும்பம் நிலை குலைந்தது. காரணம், அது வரை எந்த வேலைக்கும் நாகேஸ்வரி சென்றதில்லை. இனி மேல் எங்கு செல்வேன்? எந்த வேலை செய்து குழந்தைகளை காப்பாற்றுவேன்? என்று குழம்பியிருந்த நாகேஸ்வரியை தேற்றினார் குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளி சுயம்புகனி. தேற்றியதோடு மட்டுமல்லாமல் உடனடியாக குடும்ப வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.S. வினிதா அவர்களை தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி கூறினார் சுயம்புகனி. நாகேஸ் வரியின் குடும்ப



சூழ்நிலையை புரிந்து கொண்ட ஒருங்கிணைப்பாளர் அவரின் குடும்பம் குறித்த தகவல்களை குடும்ப வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு அனுப்பியதன் விளைவாக 2018-ம் ஆண்டு ஜனவரி மாதம் குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளியாக நாகேஸ்வரி சேர்க்கப்பட்டார்.

தண்ணீருக்கு வெளியே விழுந்த மீன் ஒன்று தன் வாழ்க்கை இத்துடன் முடிந்து விட்டது என்று எண்ணி கலங்கிய வேளையில் திடீரென மீண்டும் தண்ணீருக்குள் விழுந்து உயிர் பிழைத்தால் எவ்வளவு உள்ளம் மகிழுமோ அந்த அளவிற்கு நாகேஸ்வரியின் உள்ளமும் மகிழ்ந்தது. நடந்த சோகத்தை மனதில் மறைத்து வைத்துக் கொண்டு பிள்ளைகளை கரையேற்ற வேண்டும் என்ற ஆதங்கத்தில் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் அனைத்து பயிற்சிகளிலும் கலந்து கொண்டு தன் ஆளுமை திறனை மேம்படுத்தினார். பின்னர் முதன் முதலாக குடும்ப வளர்ச்சி திட்டம் வழியாக கிடைத்த 12000/- ரூபாயில் ஒரு பசு வாங்கி வளர்க்க ஆரம்பித்தார். பின்னர் இரண்டாம் கட்டமாக கிடைத்த 14,000/- பணத்தில் ஆடுகளும், அடுத்ததாக கணக்கு முடித்து வழங்கப்பட்ட 3,964 ரூபாயில் கோழிகளும் வாங்கி வளர்த்து வருகிறார் நாகேஸ்வரி. இவற்றி லிருந்து கிடைக்கும் வருமானத்தில் தனது குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அவர்களை படிக்கவும் வைக்கிறார். தற்போது மூத்த மகள் 10-ம் வகுப்பிலும், இரண்டாவது மகள் 8-ம் வகுப்பிலும், மூன்றாவது மகள் 5-ம் வகுப்பிலும், இளைய



மகன் பாலர் பள்ளியிலும் பயின்று வருகின்றனர்.

தனது விடா முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் இரண்டு பசுக்கள், நான்கு ஆடுகள் மற்றும் கோழிகள் என்று தன் வாழ்க்கை தரத்தை உயர்த்தியிருக்கும் நாகேஸ்வரிக்கு தற்போது ஒரு பள்ளியில் துப்புரவு தொழிலாளியாகவும் பணி கிடைத்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த குடும்ப வளர்ச்சி திட்ட உதவியாளர் திரு.பாப்பச்சன் E.கோலாட்டுக்குடி அவர்களையும், மிட்ஸ் நிறுவனத்தையும் உயிருள்ளவரை மறக்க மாட்டேன் என்று ஆனந்த கண்ணீர் வடிக்கிறார் நாகேஸ்வரி. இனி ஒரு நல்ல வீடு கட்டி குடியேற வேண்டும் என்பதே நாகேஸ்வரியின் கனவாக உள்ளது. அதற்கும் கூடிய விரைவில் கடவுள் வழிகாட்டுவார் என்று நம்பிக்கையோடு வலம் வருகிறார் இந்த தன்னம்பிக்கை பெண்மணி.

நேர்காணல்
**S. வினிதா,** ஒருங்கிணைப்பாளர் SAFP-FDP

# தொழில் முனைவோராகிட...

மிட்ஸ் வெள்ளி விழா செயல்பாடுகளில் ஒன்றான ஆரி கலை தொழில் பயிற்சியானது செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 21 வரை நாகர்கோவில் மண்டலத்தில் உள்ள 25 சுய உதவி குழு மகளிருக்கு பெருவிளை மண்டல அலுவலகத்தில் வைத்து பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் நிறைவு நாளான 21.10.2021 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் மிட்ஸ் பணியாளர்கள் முன்னிலையில் தொழில் பயிற்சிக்கான சான்றிதழ்களை வழங்கினார்கள்.





# வாசகர்கள் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால் அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## இதழின் கடைசி பக்கம்

அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs.1000/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs.2000/-

## கடைசி பக்கத்தின் உள் பகுதி


அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs.500/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs.1000/-

## பிறந்த நாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள்

கால் பக்கத்திற்கு கட்டணம் : Rs.250/-
அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs.500/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs.1000/-

*விளம்பரங்கள் வெளியிட விரும்புபவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புக்கள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*


**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம், கழுவன்திட்டை
குழித்துறை அஞ்சல்
கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email : mids.marthandam@gmail.com
Website : www.mids.org.in
Ph : 04651 - 263390, 295690



# ST. PAUL'S IAS ACADEMY

(An Institution under St. Paul's Education Trust) (Run by Diocese of Marthandam)
Malankara Bhavan, Kanyakumari.
Web : stpaulskumari.com, Email id : speamtm@gmail.com

## COACHING CLASSES

**Courses : 2021 – 22 UPSC, Civil Servise / Group – 1**
**Pre Lims & Main – Online Regular Classes**
**2021 – 22 Upsc Civil Service / Group – 1**
**Foundation Course Online / Weekend**

**Rev. Fr. John Kumar,**
Director, : 9486177900

**Mr. Rajendra Babu,** Co-Ordinator
: 9486942056

stpaulskumari.com
speamtm@gmail.com
9445662621

# MALANKARA SCHOOL OF COMMERCE

A Unit of Kanyakumari Community College
RUN BY MIDS, Diocese of Marthandam

## Integrated Scheme of Professional Study

**(A study package of CA (Inter), B.Com/M.Com Degree, Three job-oriented Diplomos and Three work skilled Certificates in Three years**

## Chartered Accountancy – Together with

| Degree (DDCE) | Diploma Courses (Regular) in | Certificate Courses (Regular) in |
|---|---|---|
| B.Com | Computerised Financial Accounting | Accounting Executive |
| M.Com / M.B.A | Business Oriented Computer Application | Junior Software Developer |
| | Foreign Trade & Import – Export Documentation | Logistic Management |
| | (Approved by Manonmaniam Sundaranar University) | (Approved by Skill India Central Governmen |



COURSE DURATION

**3 Years regular classes up to CA (Inter) and 100% Articled training with online Classes for CA – Final Examinations**
**Eligibility : +2 passed / Degree in any discipline**

Chairman : **Rev. Fr. John Kumar**
Director : **Prof. V. Arul Justin Dhas**

**Mariagiri, Kulapuram Post,**
**Kanyakumari District – 629 153.**

Ph : 04651 – 245395, 291750, 9489658034
Email : kccmariagiri1999@gmail.com
Website : www.mscica.com



Nanjil offset, Nagercoil. ✆ : (04652) 233853